**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 46/2019 (வா.சா1 – ஜெனட் செல்வகனி ) தேதி: 03.02.2026</u>**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. நான் இன்று எனது தரப்பில் கூடுதல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். மேலும் இன்று 3 ஆவணங்கள் கூடுதலாக தாக்கல் செய்கிறேன். அவை **வா.சா.ஆ. 17 முதல் 19** வரை குறியீடுசெய்யப்படுகிறது**(மேற்படி கூடுதல் ஆவணங்களை பொறுத்து பிராதில் எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றும் அதனால் மேற்படி ஆவணங்களை குறியிடு செய்ய இயலாது என்றும் கூறிய 7ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> : (3ம் பிரதிவாதி தரப்பில்)**

பிராது 2ம் தபசில் சொத்தை 3ம் பிரதிவாதி ஆனந்தராஜ் 1ம் பிரதிவாதியிடம் 04.09.2017ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், அந்த கிரைய ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். 3ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் எனக்குரிய பங்கை பொறுத்து மறுபயன் பெற்றுக்கொண்டேன் என்றால்

சரிதான். 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை மற்றும் அந்த கிரையத்தை பொறுத்து எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். அதனால் பிராது 2ம் தபசில் சொத்தை பிராதில் இருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க போகிறேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை தற்பொழுது அவர்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை** : 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.